## இராமநாதபுரம் நகராட்சி

**இராமநாதபுரம் நகராட்சியில் 2022 மே மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 20.05.2022–ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்றத்தலைவர் இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

<table>
<tr>
<td>பொருள் எண்..1</td>
<td>தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து சொத்துவரி சீராய்வு செய்வது அவசியமென அரசிற்கு பரிந்துரைத்ததன் அடிப்படையில் 11.04.2022 அன்றைய நகர்மன்ற கூட்டத்தொடர் தீர்மான எண். 22 –ல அனைத்து மன்ற உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சொத்துவரி சீராய்வு மிகவும் அத்தியாவசியமானது என தீர்மானிக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக பொதுமக்கள் தங்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை 30 தினங்களுக்குள் சமர்ப்பிக்கக் கோரி 13.04.2022 அன்று தினத்தந்தி, மதுரைமணி, மற்றும் Trrity Mirror ஆங்கில நாளிதழ் ஆகியவற்றிலும், அலுவலக விளம்பர பலகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டதில் சொத்துவரி சீராய்வு தொடர்பாக இராமநாதபுரம் வர்த்தகர்கள் சங்கத்திடமிருந்து ஒரு ஆட்சேபனை மட்டும் நேரிடையாக பெறப்பட்டது. ஆட்சேபனைகள் மின்னஞ்சல் மற்றும் தபால் மூலமாக ஏதும் பெறப்படவில்லை. மேற்படி வர்த்தக சங்க ஆட்சேபணையினை பரிசீலித்து அவர்களின் கோரிக்கை மனு ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என கருதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே வைக்கப்பட்டட தீர்மானத்தில் சொத்துவரி சீராய்வின் அத்தியாவசியத்தை முன்வைக்கப்பட்டதை கருத்தில்கொண்டு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்கவும், 15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானயம் பெறுவதற்கும், நகராட்சியின் கடன் சுமைகள் குறைக்கவும், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய இன்றியமையாத புதிய திட்டங்களை செயலாக்கவும் கருத்தில் கொண்டு தமிழக அரசின் கொள்கை முடிவின் மீது கொடுக்கப்பட்ட கால நிர்ணயத்திற்குள் பெறப்பட்ட ஆலோசனை மற்றும் ஆட்சேபனை மனுக்கள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளதாலும், அரசின் பொது சொத்து வரி சீராய்வின் மீது ஒருமனதாக முடிவெடுத்து அடிப்படை மண்டல மதிப்பீட்டின்படி கீழ்வரும் சீராய்வு வரி உயர்வினை இறுதி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)<br><br>
<table>
<tr><th>பரப்பளவு (ச.அடி)</th><th>உயர்வு செய்வதற்கான காரணி</th></tr>
<tr><td><=600</td><td>1.25</td></tr>
<tr><td>601-1200</td><td>1.5</td></tr>
<tr><td>1201-1800</td><td>1.75</td></tr>
<tr><td>>1800</td><td>2</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.45<br>நகர்மன்ற கூட்டம் 11.04.2022 அன்றைய நகர்மன்ற கூட்டத்தில் முன்மொழியப்பட்ட பொது சொத்துவரி சீராய்வு செய்தற்கான அவசியம் குறித்து ஒருமனதாக முடிவெடித்து ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டதன் மீது முடிவெடித்து 20.05.2022 அன்றைய மாமன்றத்தில் தமிழ்நாடு அரசின் கொள்ளை முடிவின் மீது பொது சொத்துவரி சீராய்வு 2022–2023றினை ஒரு மனதாக ஏற்று அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதனடிப்படையில் வரிமாற்றம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி</td>
</tr>
</table>

வழங்கப்படுகிறது.

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building)

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும்போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

இந்நிலையில், மேற்காணும் அடிப்படை மதிப்பு மற்றும் மண்டல மதிப்பினை ஊர்ஜிதம் செய்து மாவட்ட அரசிதழில் பிரசுரம்

| | | |
|---|---|---|
| | செய்யவும், மாவட்ட அரசிதழில் வெளியிட்டதன்படி பெறப்பட்ட. பெறப்படுகின்ற சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு சுய மதிப்பீட்டு படிவங்கள் மற்றும் ஆய்வு மேற்கொண்டு கணக்கிடப்பட்ட மதிப்பீட்டு கணக்கீட்டு தாள் ஆய்வுக்குறிப்பு ஆகியவற்றினை ஒப்பீடு செய்து இறுதி பட்டியல் தயார் செய்யப்படுவதனடிப்படையில் வரிகளை மறு நிர்ணயம் செய்து புதிய சொத்துவரி முதன்மைப் பதிவேட்டினை இறுதி செய்து கணிணியில் பதிவேற்றம் செய்யவும் அதனை நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்திற்கு அனுப்பி அதனடிப்படையில் சீராய்வின்படி வரி வசூல் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலும் அனுமதியும் வேண்டப்படுகிறது. அதற்கான செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2)** மேற்படி சொத்துவரி/காலியிடவரி பொது சீராய்வு முழுமையாக மேற்கொள்ளவும் அதற்கான அனைத்து (நகல் எடுத்தல், கணிணியின் பதிவேற்றம் மேற்கொள்ளுதல், வரிகேட்பு எழுப்புதல் போன்ற அவ்வப்போதைத்க்கு மேற்கொண்டு அதற்கான செலவினங்களுக்கும், அறிவிக்கையினை அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்-19 பட்சிவளையக்காரத் தெரு, வரிவிதிப்பு எண்135/019/00175ல் உள்ள சொத்துவரியில் வாரிசுதாரரர்களின் பெயர்களை சேர்க்காமல் வரி ரசீது ஒருவர் பெயரில் இருப்பது என திருமதி ஆர் ஷகிலா பானு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை அவர்களின் ஆணை எண் 77/ந/2021 நாள் 23.12.2021ல் உள்ள வழக்கினை எதிர்த்து திரு.ஆர்.அகமது ஜலால் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் WP(MD)2925/2022ல் ஆட்சேபனை செய்து தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய அரசு வழக்கறிஞர் திரு.A. கண்ணன் என்பவருக்கு வழக்கு கட்டணம் ரூ 15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க மன்றப்பொருள் வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்<br>(கோப்பு எண் 3223/14/அ4) | **தீர்மானம் எண்.46**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு குறித்து வரப்பெற்ற அரசாணை இந்நகர் மன்ற தீர்மான எண் 22 நாள் 11,04,2022ல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்துவரி சீராய்வு தொடர்பான கீழ்க்கண்ட விபரப்படியான செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/ க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்ற பொருள் வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.47**<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1 சொத்துவரி சீராய்வு செய்வது தொடர்பாக விளம்பரச் செலவினம்<br>2 சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவங்கள் அச்சடிப்பது குறித்த செலவினம்<br>**அலுவலக குறிப்பு -** மன்றம் அனுமதிக்கலாம் | |
| பொருள் எண்..4 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் எண்.9326/2021/இ1, நாள்.22.04.2022ன் தெரிவித்துள்ளதன்படி இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள மண் சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் 5 ஆண்டுகள் முடிவுற்று சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்கவும் உரிய பிரேரணை தயார் செய்யவும் அரசு நிதி ஒதுக்கீடு செய்ய கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.அரசின் 2022–2023ஆம் ஆண்டைய சாலைப்பணிகளுக்கான பிரேரணை அனுப்பி உரிய நிதியை பெற்று சாலைகள் மேம்பாடு செய்ய உரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது. | **தீர்மானம் எண்.48**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..5 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் வார்டு –எப், பிளாக்–4, நகரளவு எண்–17ல் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையம் 1992 ஆம் ஆண்டு முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது கட்டிடம் அதன் உறுதித்தன்மையை இழந்து வருவதாலும் பெருகி வரும் மக்கள் தொகையினை கருத்தில்கொண்டும் மேற்படி கட்டிடத்தின் மேற்கூரை அடிக்கடி பெயர்ந்தும் அதனை சரிசெய்வதும் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டியுள்ளதாலும் மேற்படி பேருந்து நிலையத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் பெருகி வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு இப்பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள சந்தை அமைவிடத்தையும் சேர்த்து பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி அமைக்க தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பேருந்து நிலையத்தை விரிவு படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டவாறு பிரேரனை தயார் செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1) Preparation of DPR with BOQ and obtaining Project Appraisal and Technical Sanction — Rs.5.00 Lakhs | **தீர்மானம் எண்.49**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2)</td><td>Preparation of Structural Design, Structural Drawing MEP drawing and detailed drawings</td><td>Rs.5.00 Lakhs</td></tr>
<tr><td>3)</td><td>Topographical Survey, Traffic Volume Survey, Mappings, Scheme drawing, Geotechnical Survey</td><td>Rs.5.00 Lakhs</td></tr>
</table>
அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிகளுக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணியை அவரச அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..6</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு சுமார் 9 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. மேலும் நகர் பகுதியில் சுமார் 63 கி.மீ அளவிற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டும் 2160 எண்ணம் ஆழ்நுழைவு வாயிற்புழைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் குழாய்களில் ஏற்பட்டு வரும் அடைப்புகள் மற்றும் ஆழ்நுழைவு வாயிற்புழைகளில் சேரும் மண் அகற்றி (வாகனங்கள் மூலம்)பராமரிப்பு பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் 13 நபர்களை 6 மாத காலத்திற்கு தினக்கூலி அடிப்படையில் (ஒப்பந்த அடிப்படையில்) பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ.13.40 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணியை பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண்.50<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சியின் கீழ் செயல்படும் பாதாள சாக்கடை திட்டத்திற்கு 7.00MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட (Sewage Trackrent plant) கழுகூரணி கிராமத்தில் 2.71 ஏக்கரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்பட்டு தற்சமயம் அதனை நகராட்சியே பராமரிக்க 13.01.2021 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே அதற்கான பராமரிப்பு பணிக்கு பணியாளர்களை 6 மாத காலத்திற்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி மின்மோட்டார் இயக்கவும், காவலர் பணிக்கு மற்றும் மின்பணி மேற்கொள்ளவும் ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி அடிப்படையில் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு 9.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி பணிக்கான செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் பாதாள சாக்கடை நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.51**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..8 | இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் நீரேற்று நிலையங்கள் மற்றும் நீர் ஊற்று நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு அதனை நகராட்சி வசம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் நீர் ஊற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் இயக்கவும், பராமரிப்பு பணி மற்றும் காவலர் பணியினை மேற்கொள்ளவும் நகராட்சி பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லை. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள 14 தனியார் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்தி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு 15.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்<br>2)மேற்படி பணிக்கான செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் பாதாள சாக்கடை நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.52**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..9 | இராமநாதபுரம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN65Q5389 பழுதாகி இயங்காமல் உள்ளதால் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் தொய்வு ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்ய உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி வாகனத்திற்கான பழுது நீக்கம் பணி மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.53**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..10 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள இந்தியா மார்க்II அடிபம்புடன் கூடிய ஆழ்துளை கிணறுகள் பல இடங்களில் பழுதடைந்து செயல்பாடின்றி உள்ளது. மேலும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி நகர் பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள அடிபம்புகளை சீர் செய்து பராமரிக்க உத்தேச மதிப்பீடு ரூ.1,70,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்)தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.54**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..11 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு –29 அண்ணாநகர் சமுதாயக் கழிப்பறை பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த சிரமம் ஏற்பட்டுள்ளது. ஆகவே பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான கழிப்பறையை மராமரத்து பணி மேற்கொள்ள ரூ.1.00 லட்சத்திற்கு(ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.55**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..12 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு –22ல் காந்தாரி அமம்மன் கோவில் தெரு சமுதாயக் கழிப்பறை பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாதவாறு உள்ளதால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே மேற்படி கழிப்பறையை மராமரத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.56**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..13 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு –10ல் சத்திரத்தெரு பொதுக்கழிப்பறை பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அத்தியாவசிய தேவையான பொதுக்கழிப்பறையை மராமரத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.ரூ.1.00 லட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை | **தீர்மானம் எண்.57**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..14 | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு –11ல் சமுதாய கழிப்பறை பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே மேற்படி கழிப்பறை மராமரத்து பணி செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.58**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..15 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டுகளில் அந்தந்த வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளதை தொடர்ந்து சிறு மின்விசை பம்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி பொருத்தும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. வார்டு எண்5–இல் சிறுமின் விசைப்பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொடர்பு பொருத்தி கொடுக்க –ரூ.1.50 இலட்சம்<br>2. வார்டு எண் 30ல் சிறுமின் விசைப்பம்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி பொருத்தி கொடுக்க –ரூ.1.50 இலட்சம்<br>**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கு குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.59**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..16 | இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை பராமரிப்பில், நகர்பகுதியில் சுமார் 100 மனித ஆய்வுக் குழிகள் பழுதான நிலையிலும், தாழ்வாக உள்ளதை, சாலை மட்டத்திற்கு உயர்த்திக் கட்டவும் வேண்டியுள்ளது. பொது மக்கள் புகார்கள் மற்றும் போக்குவரத்து இடையூரினை தவிர்க்கும் பொருட்டு மனித ஆய்வுக் குழிகளை (Man hole) மேம்படுத்த வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4,35,000/–த்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மானம் எண்.60**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..17 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஊரணிகளை சுற்றிலும் மற்றும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நகராட்சிக்கு சொந்தமான இடங்களிலும் உள்ள சீமைக்கருவேல மரங்களை வெட்டி எடுத்து அப்புறப்படுத்தி நீர்நிலைகளில் மழைநீரை தேக்கி வைக்கும் நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களது கடிதம் நாள்.13.04.2022ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நீர்நிலைகளில் மற்றும் | **தீர்மானம் எண்.61**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அப்புறப்படுத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்படி பணியை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..18 | இராமநாதபுரம் நகராட்சி சார்பாக பொது மக்களுக்கு கொரோனா (Covid–19) மற்றும் ஒமிக்ரான் நோய் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதிற்கு தொகை வழங்கும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.** | **தீர்மானம் எண்.62**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..19 | இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அகற்றும் வாகனம் TN65 S 0487–ற்கு பேட்டரி பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய பேட்டரி வாங்க அனுமதி கோரிய, இந்நகராட்சி பொது சுகாதார ஓட்டுநர் திரு.மு.கார்மேகம் என்பவரின் மனு மன்றத்தின் பார்வைக்கும், பேட்டரி வாங்கி பொருத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. இப்பணியின் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பேட்டரி வாங்கி பொருத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்: 1195/2022/எச்1) | **தீர்மானம் எண்.63**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..20 | அ) இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அகற்றும் வாகனம் TDR 4905–ற்கு ஹைட்ராலிக் லிப்ட் பழுதடைந்து வண்டி இயக்க முடியாத நிலையில் உள்ளதால், பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள அனுமதி கோரிய, இந்நகராட்சி பொது சுகாதார ஓட்டுநர் திரு.எம்.வீரக்குமார் என்பவரின் மனு மன்றத்தின் பார்வைக்கும், உத்தேச செலவீனம் ரூ.20,000/–த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ஆ) இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அகற்றும் இலகு ரக வாகனம் TN 65 AJ 6572 பழுதடைந்து வண்டி இயக்க முடியாத நிலையில் உள்ளதால், பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள அனுமதி கோரிய, இந்நகராட்சி பொது சுகாதார ஓட்டுநர் திரு.சி.மூர்த்தி என்பவரின் மனு மன்றத்தின் பார்வைக்கும், உத்தேச செலவீனம் ரூ.5,000/–த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மானம் எண்.64**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. இப்பணியின் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுது நீக்கப் பணிகள் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..21 | இந்நகராட்சியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஒருவரை நியமிக்க அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடித வரைவு, மன்ற தீர்மானத்துடன் அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில், திருமதி.ச.ஜான்ஸிராணி, இராமேஸ்வரம் என்பவரின் 15.12.2021ந் தேதிய விண்ணப்பத்தினை ஏற்று, மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிர்ணயித்து இராமநாதபுரம் நகராட்சியில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பணியிடத்தில் அன்னாரின் தகுதிநிலையை ஆய்வு செய்து பணியமர்த்தப்பட்டது. 25.1.2022ந் தேதி முதல் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்த திருமதி.ச.ஜான்ஸிராணி, என்பவரை மீண்டும் 89 நாட்களுக்கு மிகாமல் பணியில் நீட்டித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.திருமதி.ச.ஜான்ஸிராணி என்பவரை அவசர அவசியம் கருதி இந்நகராட்சியின் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகமாக பணியமர்த்தவும், அவருக்காகும் ஊதிய செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்: 3136/2021/சி1) | **தீர்மானம் எண்.65**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..22 | இராமநாதபுரம் நகராட்சி, தேவிப்பட்டிணம் ரோடு, கேணிக்கரை சந்திப்பில் உள்ள சிறுநீர் கழிப்பறையை மராமத்து செய்யும் பணிக்கு 5.5.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br><br>வரிசை எண் / ஒப்பந்தக்காரர் பெயர் / விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ)<br>1. / திரு.N. இளவரசன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். / 0.15% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு<br>2. / திரு.K. இராமர், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். / 0.82% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.K. இராமர், ஒப்பந்தக்காரர் | **தீர்மானம் எண்.66**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ) |
|---|---|---|
| 1. | திரு.N. இளவரசன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 0.15% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.K. இராமர், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 0.82% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

<table>
<tr><td></td><td>அவர்களது 0.15% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1121/2022/இ1)**</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..23</td><td>இராமநாதபுரம் நகராட்சி, முகவை ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணறு புனரமைத்தல் மற்றும் மின்மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு **5.5.2022–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.R. சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>0.16% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s. ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>0.83% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. R.சரவணன், ஒப்பந்ததாரர் அவர்களது 0.16% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1121/2022/இ1)**</td><td>**தீர்மானம் எண்.67**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..24</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்.5, அலங்கச்சேரி தெருவில் உள்ள சிறுநீர் கழிப்பறையை மராமமத்து செய்யும் பணிக்கு **5.5.2022–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.</td><td>**தீர்மானம் எண்.68**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வரிசை எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.N. இளவரசன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>0.11% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.K. இராமர்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>1.03% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.N.இளவரசன், ஒப்பந்ததாரர்,அவர்களது 0.11% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:1)அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1121/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..25</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, நொச்சிவயல் ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணறு புனரமைத்தல் மற்றும் மின்மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு 5.5.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.R. சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>0.12% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.N. ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>0.73% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.69<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. R. சரவணன், ஒப்பந்ததாரர் அவர்களது 0.12% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1121/2022/இ1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..26</td><td>இராமநாதபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் நகர்மன்ற தலைவர் அறை ஒதுக்கீடு செய்தல் அவற்றில் கழிப்பறை வசதி, தண்ணீர் வசதி, மின்வசதி, மேஜை மற்றும் நாற்காலி போன்ற பணிகளை மேற்கொள்ள இந்நகர் தீர்மான எண்.38, நாள்.11.04.2022–ல் ரூ.6.80 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு 05.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><td>வரிசை எண்</td><td>வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின்பெயர்கள்</td><td>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ)</td></tr><tr><td>1.</td><td>திரு.R.ஜீவானந்தம்,<br>கன்ஸ்ட்ரக்சன்<br>இராமநாதபுரம்</td><td>0.10% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr><tr><td>2.</td><td>திரு.R.சரவணன்,<br>இராமநாதபுரம்</td><td>0.23% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr></table>மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரேட் கொடுத்துள்ள திரு.R.ஜீவானந்தம், கன்ஸ்ட்ரக்சன் இராமநாதபுரம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1121/2022/இ1)</td><td>தீர்மானம் எண்.70<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..27</td><td>இராமநாதபுரம் நகராட்சி, லெட்சுமிபுரம் ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றை புனரமைத்தல் மற்றும் மின்மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு 5.5.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு</td><td>தீர்மானம் எண்.71<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ) |
|---|---|---|
| 1. | திரு.R. சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 0.11% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.N. ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 0.18% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. R. சரவணன், ஒப்பந்ததாரர் அவர்களது 0.11% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1121/2022/இ1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..28</td><td>இராமநாதபுரம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–2022 பணிகள் தேர்வு செய்து சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் எண்.18698/2021/தி2, நாள்.23.03.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ.36.00 லட்சம் மதிப்பீட்டிற்கு (பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.12.00 லட்சம் மற்றும் அரசு நிதி ரூ.24.00 லட்சம்) கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு(தொகை ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரரம் நகராட்சிக்குட்பட்ட | 5.00 |
</td><td>தீர்மானம் எண்.72<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | சின்னச்சாமி புதுத்தெருவில் வடிகாலுடன் கூடிய தார்தளம் அமைத்தல் (135/2021/002/R/00016) | |
| 2 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 மற்றும் 30ல் உள்ள தெருக்களில் கண்காணிப்பு கேமிரா(CCTV) பொருத்துதல் | 12.00 |
| 3 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு – 29ல் எக்ஸ்னோரோ பூங்கா அபிவிருத்தி செய்தல் | 8.00 |
| 4 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 மற்றும் 32ல் சிறுமின்விசை பம்புடன் கூடிய ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 6.00 |
| 5 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட நீலகண்டி ஊரணியில் உள்ள நீர் உறிஞ்சு கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய் பதித்தல் | 5.00 |
| | மொத்தம் | ரூ.36.00 லட்சம் |

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.12.00 லட்சம் நிதியினை பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பொருள் எண்..29 | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2022–23, வார்டு எண்.01 முதல் வார்டு எண்.16 வரை தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.4.65/– இலட்சத்திற்கு 28.04.2022–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி | **தீர்மானம் எண்.73**<br>அலுவலக குறிப்பு |

கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வரிசை எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின்பெயர்கள் | மதிப்பீடு தொகை (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல் / குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1. | M/s. சத்யா வாட்டர்சப்ளை, 99/1, இரயில்வே ரோடு, பழைய பஸ் ஸ்டான்ட், இராமநாதபுரம். | 4,65,000/– | 1.64% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | M/s. நியூ சமத்துவம் வாட்டர்சப்ளை, 1, ECR, திருச்சி மெயின் ரோடு, பட்டிணம்கத்தான், இராமநாதபுரம். | 4,65,000/– | 0.16% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. நியூ சமத்துவம் வாட்டர்சப்ளை, இராமநாதபுரம் அவர்களது 0.16% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) அனுமதிக்கலாம்.
2) கோடைக்கால குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மன்ற அனுதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.932/2022/இ1)

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்..30

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2022–2023 வார்டு எண்–17 முதல் 33 வரை தனியார் லாரிகள் மூலம் குடிநீர்

**தீர்மானம் எண்.74**

அலுவலக குறிப்பு

விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4.95 இலட்சத்திற்கு 28.04.2022ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (தொகை ரூ.லட்சத்தில்) | வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s நியூ சமத்துவம் வாட்டர் சப்ளை,<br>ECR, திருச்சி மெயின் ரோடு,<br>பட்டிணம் காத்தான்,<br>இராமநாதபுரம். | 4,95,000/- | 0.16% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s சத்யா வாட்டர் சப்ளை,<br>99/1, இரயில்வே ரோடு,<br>பழைய பஸ் ஸ்டாண்ட்,<br>இராமநாதபுரம். | 4,95,000/- | 0.16% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s நியூ சமத்துவம் வாட்டர் சப்ளை,இராமநாதபுரம் அவர்களது 0.16% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1)மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | 2)கோடை கால குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.932/2022/இ1 | |
| பொருள் எண்..31 | இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் விநியோகத்தில் புளிக்காரத்தெரு, கோட்டை மேட்டுத்தெரு மற்றும் வசந்த நகர் குடிநீர் பகிர்மான குழாய் பழுதாகியுள்ளதால், புதியதாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அதன்படி மேற்கண்ட தெருக்களில் குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய் அமைக்க தயார் செய்த மதிப்பீடு ரூபாய் 2,70,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:1)அனுமதிக்கலாம்.<br>2) மேலும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.75**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..32 | இராமநாதபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் தெற்கு பகுதி பிரதான கட்டிடம் மிகவும் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததை பாதுகாப்பு கருதி இடித்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. இதனால் மாணவியர்கள் கல்வி பயில்வதற்குரிய வகுப்பறை கட்டிடங்கள் போதுமானதாக இல்லை. எனவே, நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்குள் புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு தயார் செய்த மதிப்பீடு ரூபாய் 50.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1) அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.76**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..33 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 11.04.2022ந் தேதிய கடிதத்தில், SBM 2.O 2வது மாநில உயர்மட்ட குழு (SHPC 2) தீர்மானத்தின் படி, இராமநாதபுரம் நகராட்சிக்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கு 9 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் (IHHL) அமைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு தனி நபர் இல்லக் கழிப்பறை ரூ.30,000/– மதிப்பீட்டில் அமைத்திடவும், அதற்கான மானியத் தொகையாக மத்திய அரசு மானியம் கழிப்பறைக்கு ரூ.4000/– வீதமும் மாநில அரசு மானியம் ரூ.2666/– வீதமும் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.2666/– வீதமும் ஒரு கழிப்பறைக்கு ரூ.9332/– வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 9 தனிநபர் கழிப்பறைக்கு நகராட்சி பங்கு தொகை ரூ.2666/– வீதம் ரூ.24000/-த்தை பயனாளிகளுக்கு வழங்கிடவும், சரியான பயனாளிகளை தேர்ந்தெடுத்து SBM வலைதளத்தில் பதிவேற்றம் செய்து தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இதற்கான செலவினத் தொகை ரூ.24,000/– த்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.77**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**(ஒப்பம்) கு.கார்மேகம்,**
**நகர்மன்றத்தலைவர்,**
**இராமநாதபுரம் நகராடசி.**

## இராமநாதபுரம் நகராட்சி

**இராமநாதபுரம் நகராட்சியில் 2022 மே மாதத்திற்கான நகர் மன்ற சிறப்பு அவசர கூட்டம் 20.05.2022–ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்றத்தலைவர் இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021–2022ன் கீழ் முகவை ஊரணியில் (வார்டு –A, பிளாக்–5 நகரளவு எண்–33ல் புணரமைப்பு பணிக்கு அரசாணை நிலை (MS) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.13.05.2022ன்படி ரூ.256.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் எண்.20543/2021/P2, நாள்.17.05.2022–ல் வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அதன்படி மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான விளம்பர செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு– 1)** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**2)**மேற்கண்ட திட்டப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும், விளம்பர செலவினத்தை பொதுநிதி/திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.78**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு பட்டிணம்காத்தான் கிராமத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. (நகரளவை எண்.414) மேற்கண்ட உரக்கிடங்கில் கடந்த ஆண்டுகளாக குப்பைகளை கொட்டி வருவதால் உரக்கிடங்கு முழுவதும் குப்பைகிடங்காக குவிந்தும் பரவலாகவும் காணப்படுகிறது. இதனால் உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள Machinery Shed–ல் பொருத்தப்பட்டுள்ள Processing Unit பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களை பழுதுநீக்கம் செய்துள்ளதை சரி செய்ய இயலவில்லை. மேலும் அங்கு பரவலாக உள்ள குப்பைகளை தரம் பிரிக்க முடியாமல் உள்ளது. எனவே அப்பகுதியில் உள்ள குப்பைகளை அளவீடு செய்ய ஏதுவாக Hitachi இயந்திரந்தை வாடகை அடிப்படையில் நியமித்தும் Heeping முறையில் குவிக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு– 1)** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**2)**மேற்கண்ட திட்டப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும், விளம்பர செலவினத்தை பொதுநிதி/திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.79**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சியில் ஸ்வட்ச் பாரத் மிஷன் 2018–2019ஆம் ஆண்டின் கீழ் நுண்உர செயலாக்க மையம் ரூ.52.50 லட்சம் மதிப்பீட்டில் வனசங்கரி அம்மன் கோவில் தெருவில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.22866/2018/P3, நாள்.23.08.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு 12.09.2018 அன்று முதன்மை பொறியாளர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கி பணிகளும் துவங்கப்பட்டுள்ளது. இப்பணியின் அப்பகுதி மக்கள் ஆட்சேபனை தெரிவித்து வந்ததால் மேற்கொண்டு பணிகளை செய்ய இயலவில்லை.<br>இந்நிலையில் மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் (SBM தலைப்பின் கீழ்) நுண்உர செயலாக்க மையம் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தேவிப்பட்டிணம் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வார்டு–D, பிளாக்–10, நகரளவை எண்: 1 (பகுதி) நுண் உர செயலாக்க மையம் கட்டவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.30.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு– 1)** அனுமதி வழங்கலாம்.<br>2)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை ஸ்வட்ச் பாரத் மிஷன் 2018–2019ன் கீழ் மேற்கொள்ளவும் அதற்கான நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரவும் கட்டுதல் செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்திற்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.80**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**(ஒப்பம்) கு.கார்மேகம்,**
**நகர்மன்றத்தலைவர்,**
**இராமநாதபுரம் நகராடசி.**